இலங்கைத் தமிழருக்கு அரிவாள் வெட்டு

மானாமதுரை, ஜன. 19: சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் ஞாயிற்றுக்கிழமை இரவு இலங்கைத் தமிழரை வெட்டியவர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

மானாமதுரை அருகே மூங்கில் ஊரணியில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிப்பவர் ஜெயேந்திரன் (48). இவர் வீட்டிலிருந்தபோது அங்கு வந்த அடையாளம் தெரியாத மூவர் இவரை அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் வெட்டினர். பின்னர், அங்கு நின்ற இரு சக்கர வாகனத்தையும் சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர். இதில் பலத்த காயமடைந்த ஜெயேந்திரன் மானாமதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்து மானாமதுரை போலீஸார் வழக்குப் பதிந்து தப்பிச் சென்ற வர்களைத் தேடி வருகின்றனர்.

அனுமதியின்றி படகு சவாரி: நடவடிக்கை எடுக்க பரிந்துரை

தொண்டி, லாஞ்சியடி பகுதியில் அனுமதியின்றி படகு சவாரியில் ஈடுபட்ட படகு.

திருவாடானை, ஜன.19: தொண்டி அருகே அனுமதியின்றி சுற்றுலாப் பயணிகளை படகு சவாரி அழைத்துச் சென்ற படகின் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க கடலோரப் பாதுகாப்பு போலீஸார் பரிந்துரை செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், தொண்டி சுற்றுவட்டார கடல் பகுதிகளில் விடுமுறைக் காலங்களில் அனுமதியின்றி படகு சவாரி நடப்பதாக போலீஸாருக்கு புகார்கள் வந்தன. இதையடுத்து, கடலோரப் பாதுகாப்பு போலீஸார் தொண்டி கடல் பகுதியில் திங்கள்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, நம்புதாளை அருகேயுள்ள லாஞ்சியடி பகுதியில் அனுமதியின்றி சுற்றுலாப் பயணிகளை படகு சவாரிக்கு அழைத்துச் சென்றது தெரிய வந்தது.

விசாரணையில், லாஞ்சியடியைச் சேர்ந்த கயல்விழியின் படகில் ராமகண்ணு என்பவர் அனுமதியின்றி படகு சவாரியில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதையடுத்து, படகு சவாரியைத் தடுத்து நிறுத்திய கடலோரப் பாதுகாப்பு போலீஸார் சம்பந்தப்பட்ட படகின் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க மீன் வளத் துறை அதிகாரிகளுக்குப் பரிந்துரை செய்தனர்.

தமிழ்ச் சங்கத்தின் முப்பெரும் விழா

ராமநாதபுரத்தில் நடைபெற்ற தமிழ்ச் சங்கத்தின் முப்பெரும் விழாவில் பரிசுகளையும், கேடயங்களையும் பெற்ற பள்ளி மாணவ, மாணவிகள்.

ராமேசுவரம், ஜன.19: ராமநாதபுரத்தில் தமிழ்ச் சங்கத்தின் முப்பெரும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு மருத்துவர் சந்திரசேகர் தலைமை வகித்தார். மார்னிங் ஸ்டார் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். விழாவில் 'ஆன்மிகமும் மருத்துவமும்' என்ற தலைப்பில் மருத்துவர் மதுரம் அரவிந்த ராஜ், 'ஏலாதி கூறும் இனிய செய்தி' என்ற தலைப்பில் காளீஸ்வரி சுகுமார் ஆகியோர் பேசினர். இதையடுத்து, நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர் செ. மணிவண்ணன், கவிதா கதிரேசன், மணிவாசகம், தேவி. உலகராஜ், கு.ரா உள்ட்டோர் பங்கேற்றுப் பேசினர்.

மேலும், திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, ராமநாதபுரத்தில் நடைபெற்ற திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகளும் கேடயங்களும் வழங்கப்பட்டன. நிர்வாகி சீதாலட்சுமி, பொருளாளர் மங்கள சுந்தர மூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மானாமதுரையில் பொங்கல் விழா விளையாட்டுப் போட்டி

போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கிய சென்டு தன்னார்வ தொண்டு நிறுவன இயக்குநர் எல்.பாண்டி.. உடன் அமைப்பின் நிர்வாகிகள் ராதாகிருஷ்ணன், டாக்டர் முத்துராமலிங்கம் உள்ளிட்டோர்.

மானாமதுரை, ஜன. 19: சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகேயுள்ள பீசர்பட்டினத்தில் ஞாயிற்றுக்கிழமை பொங்கல் விழா, விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

ஹார்ட்ஃபுல்னெஸ் தியான நிறுவனம், செர்டு தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு செர்டு தொண்டு நிறுவன இயக்குநர் எல்.பாண்டி தலைமை வகித்து, விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். இதில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு ஹார்ட் ஃபுல்னெஸ் தியான நிறுவன ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன், செர்டு இயக்குநர் பாண்டி ஆகியோர் பரிசுகளை வழங்கினர். நிகழ்ச்சியில் ஹார்ட்ஃபுல்னெஸ் தியான அமைப்பின் நிர்வாகிகள் டாக்டர் முத்துராமலிங்கம், பொ.மாரியம்மன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் 229 மனுக்கள் அளிப்பு

ராமேசுவரம், ஜன.19: ராமநாதபுரத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் 229 கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டன.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை, தனி நபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக 229 மனுக்களை ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோனிடம் பொதுமக்கள் அளித்தனர்.

மனுக்களை ஆய்வு செய்து, விரைந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

ராமநாதபுரத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்ற மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வ. சங்கர நாராயணன், சமூகப் பாதுகாப்புத் திட்ட தனித் துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி, உதவி ஆணையர் கலால் கங்காதேவி, அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க நிர்வாகக் குழு கூட்டம்

ராமேசுவரம், ஜன. 19: ராமநாதபுரத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட நிர்வாகக் குழு கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டத் தலைவர் ஜெ.ஜே.லியோன் தலைமை வகித்தார். இயக்கத்தின் மூத்த நிர்வாகிகள் பாலகிருஷ்ணன், நவனீத கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இணைச் செயலர் பரமேஸ்வரன் வரவேற்றார். மாவட்டச் செயலர் ஜீவானந்தம் தீர்மானங்களை வாசித்தார்.

மாவட்ட மாநாட்டை சிறப்பாக நடத்திய ராமநாதபுரம் ஒன்றிய கிளையின் வட்டாரச் செயலர் பரமேஸ்வரனுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இதையடுத்து, உப குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். வானவில் மன்றம், ஆற்றல் மன்றம், துளிர் திறனறிதல் தேர்வு பற்றிய கலந்தாய்வு நடைபெற்றது.

சென்னையில் அமையவுள்ள அறிவியல் இயக்க மாநில அலுவலகக் கட்டடத்துக்கு நிதி கோரப்பட்டது. மேலும், ராமநாதபுரம் மாவட்ட புத்தகக் கண்காட்சியில் அறிவியல் இயக்கத்தின் பங்கேற்பு குறித்து விவாதிக்கப்பட்டது. நிறைவாக, மாவட்டப் பொருளாளர் சாகுல் மீரா நன்றி கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் காந்தி, பாலமுருகன், கணேசன், ஜெரோம், வின்சென்ட் வீரு, செந்தில் ராம், கல்பனா, பிரியங்கா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கறிக்கோழி பண்ணையாளர்கள் ஆர்ப்பாட்டம்

சிவகங்கை, ஜன. 19: கறிக்கோழிப் பண்ணை விவசாயிகளைக் கைது செய்ததைக் கண்டித்தும், முதல்வர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தியும் சிவகங்கை மாவட்ட கறிக்கோழி பண்ணையாளர்கள் நலச் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிவகங்கை அரண்மனை வாசல் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அந்த சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ. அப்துல்கபூர் தலைமை வகித்தார். பொருளாளர் ஆர். விஜயன் முன்னிலை வகித்தார். சிவகங்கை மாவட்ட கறிக்கோழிப் பண்ணையாளர்கள் நலச் சங்க மாவட்டச் செயலர் எஸ். பாண்டிக்கண்ணன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதில் தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனர் வழக்குரைஞர் ஈசன்முருகசாமியை திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் போலீஸார் கைது செய்ததைக் கண்டித்து முழக்கமிட்டனர். அவர் மீது போடப்பட்ட வழக்கை ரத்து செய்து உடனடியாக அவரை விடுதலை செய்ய வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் கோழிப் பண்ணை நடத்திவரும் பண்ணையாளர்களுக்கு வளர்ப்புக் கூலியை உயர்த்திவழங்காதகோழிநிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

சிவகங்கை அரண்மனை வாசல் பகுதியில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கறிக்கோழி பண்ணையாளர்கள் நலச் சங்கத்தினர்.

இதில் மாவட்டம் முழுவதுமிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கறிக் கோழிப் பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.

இது குறித்து சிவகங்கை மாவட்ட கறிக்கோழிப் பண்ணையாளர்கள் நலச் சங்க மாவட்டச் செயலர் எஸ். பாண்டிக்கண்ணன் கூறியதாவது:

சிவகங்கை மாவட்ட சங்கத்தில் 300 பேர் கோழிப் பண்ணையாளர்களாக உள்ளனர்.

கடந்த ஆட்சியில் முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி எங்களது கோரிக்கையை ஏற்று, ஒரு கிலோவுக்கு 3 ரூபாய் என இருந்த வளர்ப்புக் கூலியை ரூ.6.50 ஆக உயர்த்திக் கொடுத்தார்.

இதன் பிறகு வளர்ப்புக் கூலி உயர்வு கோரி கடந்த 2020 -இல் போராட்டம் நடத்தினோம். அப்போது, தூத்துக்குடியில் நடைபெற்ற உங்கள் தொகுதியில் ஸ்டாலின் முகாமில் பங்கேற்ற அப்போதைய எதிர் கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலினிடம் வளர்ப்புக் கூலியாக ஒரு கிலோவுக்கு ரூ.20 வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தோம்.

தான் முதல்வராக வந்தவுடன் நிறைவேற்றுவதாக உறுதிய ளித்தார். இதன்பிறகு, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனிடம் பல முறை மனு அளித்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் இல்லை என்றார் அவர்.

சிவகங்கையில் இன்று மின் தடை

சிவகங்கை, ஜன.19: சிவகங்கை நகரில் செவ்வாய்க்கிழமை (ஜன.20) மின்தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டது.

இது குறித்து சிவகங்கை செயற் பொறியாளர் (பகிர்மானம்) ஏ.கே. முருகையன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சிவகங்கை கூட்டு மின் தொகுப்பு துணை மின் நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், இங்கிருந்து மின் விநியோகம் பெறும் சிவகங்கை நகர், சுற்றியுள்ள கிராமங்களான முத்துப்பட்டி, காஞ்சிரங்கால், காமராஜர் குடியிருப்பு, பையூர், வந்தவாசி, கூத்தாண்டன், வாணியங்குடி, கீழக்கண்டணி, சுந்தரநடப்பு, சோழபுரம், சூரக்குளம் ஆகிய பகுதிகளில் 20.1.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் தடைபடும் என அதில் குறிப்பிடப்பட்டது.

மானாமதுரை, இடையமேலூர், ராஜபாளையம், சத்திரப்பட்டி, திருத்தங்கல் பகுதிகளில் நாளை மின் தடை

மானாமதுரை/ சிவகாசி/ராஜபாளையம், ஜன. 19: சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பகுதியில் வருகிற புதன்கிழமை (ஜன. 21) மின்தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டது.

மானாமதுரை சிப்காட் துணை மின் நிலையத்தில் மாதாந்திரப் பராமரிப்புப் பணிகள் நடைபெறுவதால் புதன்கிழமை காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை மானாமதுரை, சிப்காட், ராஜ கம்பீரம், முத்தனேந்தல், கட்டிக்குளம், இடைக்காட்டூர், மிளகனூர், சங்கமங்கலம், அன்னவாசல், கீழ்ப்பசலை, குறிச்சி,தெ.புதுக்கோட்டை, நல்லாண்டிபுரம், முனை வென்றி, கச்சாத்த நல்லூர, சுற்று வட்டாரப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என மானாமதுரை மின் செயற்பொறியாளர் (பகிர்மான) தெரிவித்தார்.

இடைய மேலூர்: சிவகங்கை அருகே இடையமேலூரில் அமைந்துள்ள துணை மின் நிலையப் பகுதிகளில் புதன்கிழமை மின் தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டது.

இது குறித்து சிவகங்கை செயற்பொறியாளர்(பகிர்மானம்) ஏ.கே. முருகையன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: இடையமேலூர் துணை மின்நிலையத்தைச் சார்ந்த மின் பாதைகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனால், தமராக்கி, குமாரப்பட்டி, முடிகண்டம், கண்டாங்கிப்பட்டி, மலம்பட்டி, பாப்பாகுடி, இடையமேலூர், சாலூர், கூட்டுறவுப்பட்டி, மேலப்பூங்குடி, சக்கந்தி, புதுப்பட்டி, தேவன்கோட்டை, வில்லிபட்டி, ஒக்குபட்டி ஆகிய பகுதிகளுக்கு 21.1.2026 (புதன்கிழமை) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இருக்காது என அதில் குறிப்பிடப்பட்டது.

சிவகாசி: திருத்தங்கல், செங்கமலநாச்சியார்புரம் பகுதிகளில் புதன்கிழமை (ஜன. 21) மின் தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து சிவகாசி கோட்ட மின் வாரிய செயற்பொறியாளர் பாபநாசம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருத்தங்கல் துணை மின் நிலையத்தில் புதன்கிழமை மாதாந்திரப் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளது. இதனால், திருத்தங்கல் நகர், செங்கமலநாச்சியார்புரம், கீழத்திருத்தங்கல், சாரதாநகர், பூவநாதபுரம், வடபட்டி, நடுவப்பட்டி, ஈஞ்சார், தேவர்குளம், சுக்கிரவார்பட்டி துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெறும் சுக்கிரவார்பட்டி, அதிவீரன் பட்டி, நமஸ்கரித்தான்பட்டி, சாணார் பட்டி, இதைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்றார் அவர்.

ராஜபாளையம்...: இதுகுறித்து ராஜபாளையம் மின்வாரிய செயற்பொறியாளர் முத்துராஜ் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ராஜபாளையம் துணை மின் நிலையத்தில் புதன்கிழமை (ஜன. 21) மாதாந்திரப் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளது. இதனால், பி.எஸ்.கே. நகர், அழகைநகர், ஐஎன்டியுசிநகர், மலையடிப்பட்டித் தெற்கு, சங்கரன்கோவில் முக்கு, தென்காசி சாலை, அரசு மருத்துவமனை, புதிய பேருந்து நிலையம், பாரதிநகர், ஆர். ஆர்.நகர், சமுசிகாபுரம், சத்திரப்பட்டி , எஸ். ராமலிங்கபுரம், கலங்காபேரி புதூர், மொட்டமலை, வ.உ.சி.நகர், பி.ஆர்.ஆர். நகர், பொன்னகரம், எம்.ஆர்.நகர், லட்சுமியாபுரம், ராம்கோநகர், நத்தம்பட்டி, வரகுணராமபுரம், இ.எஸ்.ஐ. குடியிருப்பு, ஸ்ரீரெங்கபாளையம் ஆகிய பகுதிகளில் புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின்விநியோகம் இருக்காது என்றார் அவர்.

பள்ளி விளையாட்டு விழா

ராமநாதபுரம் பள்ளியில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவிக்குப் பரிசு வழங்கிய பள்ளி நிர்வாகிகள்.

கமுதி, ஜன. 19: ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரை அடுத்த தேரிருவேலி தேரிருவேலி ராவுத்தர் சாஹிப் மேல் நிலைப் பள்ளியின் விளையாட்டு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்விக் குழுத் தலைவர் எம்.நூர்தீன் தலைமை வகித்தார். பள்ளியின் தாளாளர் ஜே.முபாரக் ஹுசேன் முன்னிலை வகித்தார். மருத்துவர் எஸ்.சாதிக்அலி, சென்னை விமானக் கட்டுப்பாட்டு அலுவலர் ஹே.எஸ். சுல்தான் செய்யது இப்ராஹிம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு பேசினர்.

விழாவில் மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

தலைமை ஆசிரியர் எஸ். கரீம்கனி, ஆசிரியர்கள் எம். ஜூபைர், எப்.தாருல் சலாம், ஆசிரியை இருதயராணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாவட்ட ஓய்வூதியர் சங்க செயற்குழு கூட்டம்

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன. 19: தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க விருதுநகர் மாவட்ட செயற்குழு கூட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதற்கு மாவட்டத் தலைவர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். வட்ட கிளை தலைவர் கருப்பையா வரவேற்றார். மாநிலச் செயலர் குருசாமி கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

இதில் 70 வயதைக் கடந்தவர்களுக்கு ஓய்வூதியத்தை 10 சதவீதம் அதிகரிக்க வேண்டும். அங்கன்வாடி, சத்துணவு மையங்களில் பணியாற்றிய தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.7,850 ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

மருத்துவக் காப்பீட்டுத் திட்ட குறைபாடுகளை களைய வலியுறுத்தி, மாவட்டத்தில் உள்ள 8 வட்டங்களில் ஜனவரி 27- இல் ஆர்ப்பாட்டம் நடத்துவது, பிப்ரவரி 10-இல் விருதுநகரில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் மாவட்டச் செயலர் ராமசுப்பிரமணியராஜ், மாநில செயற்குழு உறுப்பினர் கல்யாணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 116 கிலோ கஞ்சா பறிமுதல்

ராமேசுவரம், ஜன. 19: ராமநாதபுரம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.40 லட்சம் மதிப்புள்ள 116 கிலோ கஞ்சாவை சுங்கத் துறையினர் திங்கள்கிழமை கைப்பற்றினர்.

ராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், பெரியபட்டணம் அருகேயுள்ள தோப்புவலசை கடற்கரையோரம் இலங்கைக்கு கடத்துவதற்காக கஞ்சா புதைக்கப்பட்டுள்ளதாக ராமநாதபுரம் சுங்கத் துறையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, தோப்புவலசை கடற்கரையில் குறிப்பிட்ட இடத்தில் புதைக்கப்பட்டிருந்த ரூ.40 லட்சம் மதிப்புள்ள 116 கிலோ கஞ்சாவை சுங்கத் துறையினர் கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக... www.dinamani.com

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா
Central Bank of India
மானாமதுரை கிளை, சிவகங்கை
விலைப்புள்ளி கோரல் அறிவிப்பு
எங்கள் வங்கி மானாமதுரை கிளை, சிவகங்கையில் இண்டீரியர், ஃபர்னிஷிங், எலெக்ட்ரிகல் மற்றும் டேட்டா கேபிள் வேலைகளுக்கு அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி கோரப்படுகிறது.
மேலும் விபரங்களுக்கு சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா எண் 174, பை பாஸ் சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில், மானாமதுரை, சிவகங்கை 630606-க்கு வருகை தரவும்
விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: 26.01.2026
முதுநிலை மேலாளர், மதுரை

(BEFORE THE STATE CONSUMER DISPUTES REDRESSAL COMMISSION AT MADURAI BENCH
CMP NO. 827 of 2025 in F.A No. 788 of 2025
In C.C. No. 67 of 2022
(On the file of the District Consumer Disputes Redressal Commission at Pudukkottai). 1. Branch Manager, Indian Overseas Bank, Perungalur Branch, Perungalur Post, Pudukkottai District. 2. Head Manager, Indian Overseas Bank, Annexure Building, 6th Floor, Anna Salai, Chennai – 600 002
.....Appellants/1 to 2 Opposite parties
-Vs-
1. Mrs. Gnanambal and others
... respondents / complainants / 3 to 5 Opposite parties
1. Branch Manager, Universal Sompo General Insurance Co. Ltd., Ambikapathi Tower, D.D. Nagar, Karaikudi, Sivaganga District.
.....7th Respondent /3 Opposite party
Please take notice that the above CMP NO. 827 of 2025 in F.A No. 788 of 2025 In C.C. No. 67 of 2022 has been filed by the Appellants/1 to 2 Opposite parties against the respondents to condone the delay in filing the FA. When the above CMP came up on 12.01.2026 before Hon'ble State Consumer Disputes Redressal Commission At Madurai Bench has directed us to take paper publication against the respondents and posted the matter to 09.02.2026.
Please be present in person or through an Advocate on 09.02.2026 before the Hon'ble State Consumer Disputes Redressal Commission At Madurai Bench @ 10.30A.M failing which the matter will be heard and decided in your all absence.
-sd-
K. JAYAGANGA
Advocate
Counsel for Appellants/1 to 2 Opposite parties

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
நெ.23, புதுக்கோட்டை மெயின்ரோடு, சேதுராமன் பிள்ளை காலனி அருகில், கல்லுக்குழி, திருச்சி-620020.
நகை மறு ஏல இறுதி அறிவிப்பு
எங்கள் நிறுவனத்தில் 31.10.2024 வரை நகைக்கடன் மற்றும் 30.04.2025 வரை சிறப்பு நகைக்கடன் திட்டத்தின்கீழ் ஈடு வைக்கப்பட்ட நகைகள், கெடு கடந்தும், மீட்கப்படாத காரணத்தினால், நகைக்கடன் சட்டதிட்டப்படி கடந்த 24.11.2025 முதல் 27.12.2025 வரை நடைபெற்ற பொதுஏலத்தின் போது பல்வேறு காரணங்களினால் நிறுத்திவைக்கப்பட்ட நகைகள் 27.01.2026 அன்று 12.30 PM முதல் 3.30 PM வரை Online மூலமாக மறுஏலம் விடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.
சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள் அனைவருக்கும் தனித்தனியே மறு ஏல இறுதி அறிவிப்பு கடிதம் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.
அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள்
மதுரை - ஆரப்பாளையம் - SELVAKUMAR .G-ARAPA376827, ARAPA376828
ஏலத்தில் பங்கேற்க விரும்புவர்கள் https://gold.samil.in என்ற இணைய தளத்தில் பதிவு செய்து ஏலத்தின் நடைமுறைகளை தெரிந்து கொள்ளலாம். Online Auction விபரங்களுக்கு G.பாலமுருகன்-9381288049 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
இப்படிக்கு
தேதி: 20.01.2026, இடம் : மதுரை
நிர்வாக குழு அங்கீகாரம் பெற்ற ஏலதாரர்.

கனரா வங்கி Canara Bank
சிண்டிகேட் Syndicate
காரைக்குடி கிளை
பொது அறிவிப்பு: (லாக்கர் உடைத்தற்கான சட்ட அறிப்பு)
பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது:
கனரா வங்கி காரைக்குடி கிளையில் உள்ள லாக்கர் எண்.163 இதன் உரிமையாளர்கள் 1. திரு. C.T.சிவசுப்ரமணியன் (முகவரி: எண்.70, வடக்கு வல்லம்பர் தெரு, காரைக்குடி) மற்றும் 2. திருமதி S.மங்கையற்கரசி (முகவரி: எண்.70, வடக்கு வல்லம்பர் தெரு, காரைக்குடி) இவர்கள் இருவரும் E or S முறையில் இயக்கி வந்தனர். மேலும் 24.09.2005க்குப் பிறகு லாக்கர் இயக்கப்படாததால் பலமுறை எழுத்து பூர்வ அறிவிப்புகள் வழங்கப்பட்டம் நீண்ட காலமாக லாக்கை இயக்கவில்லை.
திருமதி. S.அன்னபூரணி (க/பெ. திரு. C.T.சிவசுப்பிரமணியன்) S.சாந்தி (க/பெ. திரு. C.T.சிவசுப்பிரமணியன்) மற்றும் S.நாச்சம்மை (க/பெ. திரு. C.T.சிவசுப்பிரமணியன்) ஆகிய வங்கி காரைக்குடி கிளையை அணுகி திரு. C.T.சிவசுப்பிரமணியன் அவர்களின் உண்மையான வாரிசுகள் என்றும் இவரின் பெயரில், லாக்கரில் உள்ள பொருட்களை வங்கி விதிமுறைகளின்படி வழங்கக் கேட்டுக்கொண்டனர். திருமதி. S.மங்கையற்கரசியின் சார்பில் உரிமையாளரோ அல்லது இவரின் வாரிசுதாரர்களோ கனரா வங்கி காரைக்குடி கிளையை தொடர்பு கொள்ளவில்லை இதன் காரணமாக வங்கி நடைமுறை விதிகளும், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வழிகாட்டுதல்களும் அடிப்படையாகக் கொண்டு வங்கி சேவை நோக்கில் வங்கியின் அதிகாரப்பூர்வ குழு மற்றும் சாட்சிகள் முன்னிலையில், லாக்கர் உடைக்கப்படும் (Break Open) என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.
மேற்கண்ட லாக்கரின் உரிமையாளர், அல்லது அவர்களின் வாரிசுகள், உரிய ஆவணங்களுடன், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் வங்கியின் கிளையை தொடர்பு கொள்ளத் தவறினால், 03.02.2026 அன்று வாடிக்கையாளர் சேவை நேரத்தில் லாக்கரின் உள்ளடக்கம் வங்கி பதிவேட்டில் பதிவு செய்து, விதிமுறைகளின்படி பாதுகாப்பாக வைக்கப்படும்.
இது குறித்து பின்னர் எவ்வித எதிர்ப்புகள் அல்லது கோரிக்கைகள் ஏற்கப்பட மாட்டாது எனவும் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.
இவ்வறிவிப்பு, சம்பந்தப்பட்ட அனைவரின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது.
நாள்: 19-01-2026
இடம்: காரைக்குடி
கிளைமேலாளர்
கனரா வங்கி, காரைக்குடி